# பெரம்பலூர் நகராட்சி

**2018ம் ஆண்டு நவம்பர் மாதம் 29.11. 2018 ம் தேதி மாலை 10.30 மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**தலைமை : தனிஅலுவலர் (ம) ஆணையாளர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 29.11.2018 | **பொருள் 01:** இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் தகவல் கல்வி தொடர்புபணி மேற்கொள்வதன் மூலமாக திறந்தவெளியில் மலம், சீறுநீர் கழித்தலால் ஏற்படும் சுகாதார சீர்கேடு திடக்கழிவு குறைத்திடும் வழிமுறைகள் திடக்கழிவுகளை மறுசுழற்ச்சி செய்தல் மீண்டும் பயன்படுத்துதல் போன்ற விழிப்புணர்வு பொதுமக்களுக்கு ஏற்படுத்துவதற்காக 5 எண்ணிக்கை பரப்புரையாளர்கள், 1 எண்ணிக்கை மேற்பார்வையாளர் ஆகிய 6 பணியாளர்களை இந்நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இப்பணியாளர்களுக்கான ஊதியத்தினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தின் மூலமாக வழங்கப்பட்டுவரப்பட்டது. மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ந.க.எண்.857/2017/இ2, நாள்.17/10/2018–ம் தேதிய கடிதத்தில் மேற்படி தூய்மை இந்தியா திட்டத்திற்காக பணி செய்துவரும் பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு அக்டோபர் 2018, நவம்பர் 2018 மற்றும் டிசம்பர் 2018 ஆகிய மூன்று மாதங்களுக்கான ஊதியத்தினை அந்தந்த நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்கிடவும் அரசிடமிருந்து நிதி பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>எனவே, இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் பணிகள் செய்துவரும் மேற்பார்வையாளர்கள் மற்றும் பரப்புரையாளர்களுக்கு ஒரு மாதத்திற்கான ஊதியம் தோராயமாக ரூ.83000/- வழங்க வேண்டியுள்ளது. எனவே, அக்டோபர் 2018, முதல் டிசம்பர் 2018 வரை மூன்று மாதத்திற்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் ரூ.249000/- உத்தேச செலவினத்திற்கும், இச்செலவினத்தினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>(அ)நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதத்தின் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு ஊதியம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ஆ) மேற்டி செலவினம் தொகைக்கு நிதி வரப்பெற்றவுடன் ஈடு செய்து கொள்ளவும் அனுமதிக்கலாம்<br><br>ந.க.எண்.3307/2018/H1 | தீர்மான எண் : 164<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 29.11.2018 | **பொருள் 02:** இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வரை வார்டு வரையுள்ள பகுதிகளில் உள்ள திறந்த வெளி கிணறுகள் மற்றும் காவேரி குடிநீருக்கு குளோரின் சேர்ப்பதற்கு அரசு அங்கிகாரம் பெற்ற நிறுவனமான தமிழ்நாடு மல்டி பர்பஸ் இண்டோ கோ சர்வீஸ் திருச்சி மூலம் பிளிச்சிங் பவுடர் வாங்க உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்கண்ட பணி குடிநீர் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 10154/2018/இ2 | தீர்மான எண் :165<br>அனுமதிக்கப்பட்டது |
| 29.11.2018 | **பொருள் 03:** இந்நகராட்சியின் 2018-2019 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 01.11.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | தீர்மான எண் :166<br>அனுமதிக்கப்பட்டது |

பொது நிதி 2018-2019

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (இலட்சம்) | வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு புதியதாக காம்பேக்டர் பின்கள் வாங்கும் பணி | 10.00 | சுசி இன்ட்ஸ்டிரிஸ் ஒப்பந்ததாரர் (–) 0.17% மதிப்பீட்டிற்கு குறைவு<br>ராஜ் இன்ட்ஸ்ரிஸ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.84% மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த சுசி இன்ட்ஸ்டிரிஸ் பெரம்பலூர்மதிப்பீட்டினை ஏற்கலாம் |

**அ.கு.**

1. மேற்கண்டபணியில் குறைந்தஒப்பந்தப்புள்ளி அளித்த சுசி இன்ட்ஸ்டிரிஸ் ஒப்பந்ததாரர் அவர்களின் (–) 0.17%,குறைந்த மதிப்பீட்டினை ஏற்கலாம்.

2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 7476 /2018/இ1

29.11.2018

**பொருள் 04:** இந்நகராட்சியின் பாரளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2018-2019 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 01.11.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| பாரளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2018-2019 | | | | |
|---|---|---|---|---|
| **வ.எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை (இலட்சம்)** | **வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்** |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11 ல் உள்ள நகராட்சி அலுவலகத்திற்கு பின்புறம் சித்தர் கொட்டகை அருகில் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் கிணறு ஆழப்படுத்துதல் பணி | 5.00 | R. ரத்தினம் ஒப்பந்ததாரர் பெரம்பலூ (-) 0.22%<br>A. அசோக்குமார் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 1.71% மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த R. ரத்தினம் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |

**அ.கு.**

**1.** மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த R. ரத்தினம் ஒப்பந்ததாரர் அவர்களின் (–) 0.22%,குறைந்த மதிப்பீட்டினை ஏற்கலாம்.

**2.** மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 11188 /2018/இ1

தீர்மான எண் :167 அனுமதிக்கப்பட்டது

29.11.2018

**பொருள் 05:** இந்நகராட்சியின் பாரளுமன்ற உறுப்பினர் உள்ளுர் வளர்ச்சி திட்டம் 2018-2019 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 01.11.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

பாரளுமன்ற உறுப்பினர் உள்ளுர் வளர்ச்சி திட்டம் 2018-2019

| **வ.எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை (இலட்சம்)** | **வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்** |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட ஆலாம்பாடி சாலையில் உள்ள குடிநீர் கிணறு ஆழப்படுத்துதல் பணி | 5.00 | D. ராஜேந்திரன் ஒப்பந்ததாரர் பெரம்பலூ (-) 0.15% மதிப்பீட்டிற்கு குறைவு<br>M/s, ராஜ் கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 1.06% மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த D. ராஜேந்திரன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |

**அ.கு.**

**1.** மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த D. ராஜேந்திரன் ஒப்பந்ததாரர் அவர்களின் (–) 0.15%,குறைந்த மதிப்பீட்டினை ஏற்கலாம்.

**2.** மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 11188 /2018/இ1

தீர்மான எண் :168 அனுமதிக்கப்பட்டது

29.11.2018

**பொருள் 06 :** இந்நகராட்சியின் பாரளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2018-2019 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 01.11.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| பாரளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2018-2019 | | | | |
|---|---|---|---|---|
| **வ.எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை (இலட்சம்)** | **வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்** |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட எளம்பலூர் சாலையில் உள்ள உப்போடையில் உள்ள குடிநீர் கிணறு ஆழப்படுத்துதல் பணி | 5.00 | D. ராஜேந்திரன் ஒப்பந்ததாரர் பெரம்பலூ (-) 0.28%மதிப்பீட்டிற்கு குறைவு | குறைந்த விலைப்புள்ளி அளித்த D. ராஜேந்திரன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |
| | | | M/s, ராஜ் கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 2.50% மதிப்பீட்டிற்கு அதிகம் | |

**அ.கு.**

**1.** மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த D. ராஜேந்திரன் ஒப்பந்ததாரர் அவர்களின் **(–)** 0.28%,குறைந்த மதிப்பீட்டினை ஏற்கலாம்.

**2.** மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 11188 /2018/இ1

தீர்மான எண் :169
அனுமதிக்கப்பட்டது

| தேதி | பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 29.11.2018 | **பொருள் 07:** இந்நகராட்சியின் பாரளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2018-2019 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 01.11.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | தீர்மான எண் :170 அனுமதிக்கப்பட்டது |

பாரளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2018-2019

| **வ.எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை (இலட்சம்)** | **வரப்பெற்ற ஒப்பந்துபுள்ளியின் விவரம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்** |
|---|---|---|---|---|
| 1 | பெரம்பலூர் நகராட்சி துறைமங்கலம் 9வது வார்டு ஆதிதிராவிடர் பகுதியில் உள்ள சமுதாய கூடத்தில் சுற்றுச்சுவர் கட்டும் பணி | 10.00 | M/s. SPT & Co ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.05% மதிப்பீட்டிற்கு குறைவு<br>G. கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.09% மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. SPT & Co பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |

**அ.கு.**

**1.** மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s. SPT & Co ஒப்பந்ததாரர் அவர்களின் (–) 0.05%, குறைந்த மதிப்பீட்டினை ஏற்கலாம்.

**2.** மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 11188 /2018/இ1

| தேதி | பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 29.11.2018 | **பொருள் 08:** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு எண் 18,20,4,1,7,11, ஆகிய பகுதிகளில் காவேரி குடிநீர் முழுமையாக வழங்க இயலவில்லை. மேலும் வரப்பெறும் தண்ணீர் பொது மக்களுக்கு போதுமானதாகவும் இல்லை இதனால் குறிப்பிட்டுள்ள இடங்களுக்கு அதன் அருகில் உள்ள திறந்த வெளி கிணறு மூலம் கிணற்று தண்ணீரை வழங்கி சரி செய்ய இயலும் என்பதால் அதற்கு தேவையான விநியோக பைப்லைன் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்படி பைப்லைன் அமைக்க ரூ.9.85 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் : 13275 /2018/இ1 | தீர்மான எண் :171 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 29.11.2018 | **பொருள் 09:** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **1** முதல் **21** வரையுள்ள அடிபம்புகளில் (Hand Pump) ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது சீர் செய்ய அவசியம் ஏற்படுகிறது. மேற்படி பழுதுகளை பழுது சீர் செய்ய உதிரி பாகங்கள் இல்லாமல் ஆட்கூலி மட்டும் வைத்து பழுது சீர் செய்ய உத்தேச செலவினத் தொகை ரூ. **2.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் : 13565 /2018/இ1 | தீர்மான எண் :172 அனுமதிக்கப்பட்டது |
| 29.11.2018 | **பொருள் 10 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **1** முதல் **21** வரையுள்ள கொள்ளிடம் கூட்டு குடிநீர் குழாய்கள் மற்றும் கிணற்று நீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை பழுது சீர் செய்ய ஆட்கூலி மற்றும் பொருட்கள் உட்பட ரூ.**6.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**<br>குடிநீர் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 10879 /2018/இ1 | தீர்மான எண் :173 அனுமதிக்கப்பட்டது |
| 29.11.2018 | **பொருள் 11 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **1** முதல் **21** வரையுள்ள நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுகளில் உள்ள மின் மோட்டாகளில் ஏற்படும் பழுதுகளை பழுது சீர் செய்ய ரூ.**5.00** இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>குடிநீர் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 13138 /2018/இ1 | தீர்மான எண் :174 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>29.11.2018</td>
<td>
பொருள் 12 : பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் பொது மக்கள் நலன் கருதி அடிப்படை வசதிகள் செய்வதற்கு புதிய தெரு விளக்கு அமைக்க விண்ணப்பம் அனுப்பபட்டதை தொடந்து மின் வாரியத்திலிருந்து கீழ்கண்டவாறு மதிப்பீடு தொகை செலுத்த கடிதம் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><td>1</td><td>செல்வா நகர் நான்கு ரோடு</td><td>ரூ. 50760</td></tr>
<tr><td>2</td><td>செல்வா நகர்</td><td>ரூ. 256040</td></tr>
<tr><td>3</td><td>செல்வா நகர்</td><td>ரூ. 53520</td></tr>
<tr><td>4</td><td>கோல்டன் நகர்</td><td>ரூ. 28210</td></tr>
<tr><td>5</td><td>வார்டு 9 MLA வீடு அருகில்</td><td>ரூ. 14585</td></tr>
<tr><td>6</td><td>அபிராமபுரம்</td><td>ரூ. 62510</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>ரூ. 465625</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற மதிப்பீட்டுத் தொகை ரூ. 465625/- யை தமிழ்நாடு மின் வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அ.கு<br>
1. மன்றத்தின் அனுமதி வழங்கலாம்<br>
2. மேலும் மேற்கண்ட பணி தெருவிளக்கு பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
<br>
ந.க.எண் : 2781/2017/இ1
</td>
<td>தீர்மான எண் :175<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

**// ஒம் // திரு . ஆர் வினோத் பி.எஸ்சி**
**தனி.அலுவலர் / ஆணையாளர்**
**பெரம்பலூர் நகராட்சி**